27.8.2024

ஊடக வெளியீடு

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**பினாங்கு உள்நாட்டு நீர் தள்ளுபடி 2024 செப்டம்பர் முதல் 2024 டிசம்பர் வரையிலான குடிநீர் கட்டணத்தில் காட்டப்படும்**

- **இரு மாதத்திற்கு ஒரு முறை வழங்கப்படும் நீர் கட்டணத்திற்கு மூன்று முறை அதாவது ஒரு கட்டணத்தில் அதன் முதல் 10 கன மீட்டர் (m3) உள்நாட்டு பயன்பாட்டுக்கு ரிம6.20 தள்ளுபடி. மொத்தமாக ரிம18.60 தள்ளுபடி வழங்கப்படும்.**

- **இந்த பினாங்கு மாநில அரசாங்கத்தின் கட்டாயத் தள்ளுபடியானது சுமார் 597,705 உள்நாட்டு பயனீட்டாளர்கள் பயனடைய வித்திடும்.**

- **PBAPPக்கான கணிக்கப்பட்ட தாக்கம்: ரிம11 மில்லியன்.**

பினாங்கு, செவ்வாய், 27.8.2024: பினாங்கு உள்நாட்டு பயனீட்டாளர்களுக்கு ரிம11 மில்லியன் நீர் கட்டணத் தள்ளுபடி 2024 செப்டம்பர் முதல் 2024 டிசம்பர் வரை PBAPP வழங்கிய கட்டணங்களில் காட்டப்படும்.

பினாங்கில் உள்ள அனைத்து வீட்டு நீர் பயனீட்டாளர்களும் 6-மாத காலக்கட்டத்தில் (2024 ஜூலை - டிசம்பர் வரை) தொடர்ந்து இரு மாதத்திற்கு ஒரு முறை வழங்கப்படும் 3 நீர் கட்டணங்களில் முதல் 10m3 (10,000L) பயன்பாட்டுக்கு கட்டணம் விதிக்கப்படாது. 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பினாங்கு மாநில அரசு வழங்கிய வழிகாட்டுதலுக்கு இணங்க, பினாங்கில் அமலாக்கம் செய்யப்பட்ட புதிய 2024 உள்நாட்டு நீர் கட்டண விகிதம் மத்திய அரசால் நெறிமுறைப்படுத்தப்பட்டன.

இந்தத் தள்ளுபடி சுமார் 598,000 பினாங்கு உள்நாட்டு நீர்ப் பயனீட்டாளர்கள் பயனடைவர். ஒவ்வொரு உள்நாட்டு பயனீட்டாளர்களும் மொத்தமாக ரிம18.60 சேமிப்பர்.

இந்தத் தள்ளுபடியானது உள்நாட்டு பயனீட்டாளர்களுக்கு மட்டுமே. இது உள்நாட்டு அல்லாத பயனீட்டாளர்களுக்கு, கப்பல் சார்ந்த பயனீட்டாளர்கள் அல்லது வழிபாட்டு இல்லங்கள் மற்றும் சமூகநல இல்லங்களுக்கு வழங்கப்படாது

கட்டணத் தேதியைப் பொறுத்தமட்டில், உள்நாட்டு பயனீட்டாளர்கள் செப்டம்பர்/அக்டோபர் 2024 (ரிம12.40) மற்றும் நவம்பர்/டிசம்பர் 2024 (ரிம6.20) என கட்டண சுழற்சியில் வழங்கப்படும் கட்டணங்களில் தள்ளுபடியைக் காணலாம்.

3 தொடர்ச்சியான கட்டணங்களில் தள்ளுபடியைப் பெறாத உள்நாட்டு பயனீட்டாளர்கள், PBAPP 24-மணிநேர அழைப்பு மையத்தை (தொலைபேசி எண்: 04 255 8 255) அழைக்கலாம் அல்லது கொம்தார், பாலிக் புலாவ், பாயான் பாரு, புக்கிட் மெர்தாஜாம், ஜாவி, கெபாலா பத்தாஸ், பிறை காம்ப்ளக்ஸ், ரிபிள் ரேஞ்ச் மற்றும் தாமான் செலாட் போன்ற எங்களின் 9 வாடிக்கையாளர் சேவை மையங்களில் ஏதேனும் ஒன்றைத் தொடர்புக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**"பெரிய குடும்பம்" தள்ளுபடி (ஒரு நீர் கட்டணத்திற்கு ரிம20)**

ஒரு மாதத்திற்கு அதிகபட்சமாக ரிம5,580 குடும்ப வருமானம் கொண்ட பெரிய குடும்பம் (8 பேர் அல்லது அதற்கு மேற்பட்டவர் கொண்ட குடும்பம்) தங்கள் இரு மாத வீட்டு நீர் கட்டணத்தில் ரிம20 தள்ளுபடியைப் பெற தகுதிப் பெறுகின்றனர்

2024 செப்டம்பர் முதல் தகுதிவாய்ந்த குடும்பங்கள் இந்த "குடும்ப-நட்புறவு தள்ளுபடியை" தங்கள் வீட்டு நீர் கட்டணத்தில் பெறலாம். இந்தத் தள்ளுபடிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் அருகிலுள்ள PBAPP வாடிக்கையாளர் சேவை மையத்தை அணுகலாம்.

**இரு மாத கட்டணம் கால அளவு 63 நாட்களுக்கு மட்டுமே கணக்கிடப்படும்.**

பொதுப் புகார்களுக்குப் பதிலளிக்கும் வகையில், PBAPP தனது இரு மாத கட்டண காலக்கட்டத்தை 2024 அக்டோபர் முதல் அதிகபட்சமாக 63 நாட்களுக்குக் கட்டுப்படுத்தும் வகையில் மாற்றங்களைச் செய்துள்ளது. 63-நாள் வரம்பு என்பது பொது விடுமுறை நாட்கள் மற்றும் மாத இறுதிகளில் ஏற்படக்கூடிய விடுமுறை நாட்களையும் உள்ளடக்கியுள்ளது.

2024 மார்ச் முதல், 67 நாட்கள் வரையிலான கால இடைவெளியில், சில வீட்டு நீர் பயனீட்டாளர்களிடம் பயன்பாட்டுக்கான கட்டணம் வசூலிக்கப்பட்டது விசாரணையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் "கட்டணத் தாமதம்" கடந்த 6 மாதங்களில் பொது விடுமுறை

நாட்களின் எண்ணிக்கை மற்றும் அதிகரித்து வரும் மீட்டர் வாசிப்பு பணிச்சுமை காரணமாக ஏற்பட்டது. 2024, ஜூன் மாதத்தில், பினாங்கு மாநிலம் முழுவதும் 696,910 நீர்ப் பயனீட்டாளர்களுக்கு PBAPP சேவை வழங்கி வருகின்றது.

இது உடனடியாக அமலுக்கு வரும் வகையில், PBAPP, பினாங்கு நீர் கட்டணங்கள் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, மீட்டர் வாசிப்புகளுக்கான கூடுதல் பணி ஒதுக்கீடுகளை அதிகரித்துள்ளது. அடுத்த 6 மாதங்களில் அதிகமான மீட்டர் வாசிப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவோம்.

1.10.2024 முதல், 63 நாட்களுக்கும் மேலான காலக்கெடுவை உள்ளடக்கிய கட்டணம் பெறும் எந்தவொரு உள்நாட்டு நீர் பயனீட்டாளர்கள், கட்டணம் சரிபார்ப்புக்கு அருகிலுள்ள PBAPP வாடிக்கையாளர் சேவை மையத்திற்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

---

எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Unit

மின்னஞ்சல் : syarifah@pba.com.my